# பிரிட்டிஷ் போர்க் கப்பலைப் பின்தொடரும்

# சோவியத் வேவு கப்பல்!

## தயார் நிலையில் ஆர்ஜென்டீனு


விலை ரூபா 1-00 ★

ஈழநாடு

THE EELANADU

மலர் 24 பங்குனி 30 ஐ. ஆகிர் 17 இதழ் 59

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 12—4—82


லண்டன் ஏப். 11

2000 துருப்புகளுடன் கடந்த வெள்ளிக்கிழமை லண்டனிலிருந்து புறப்பட்ட 'கன்பரா' என்ற யுத்தக்கப்பலை சோவியத் வேவு பார்க்கும் கப்பல் ஒன்று பின் தொடர்ந்து செல்வதாக பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

யுத்தம் ஏற்படும் பட்சத்தில் இந்த 2000 துருப்புகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக வைத்திய நிபுணர்களையும் சிகிச்சைப்பிரிவுகளையும் கொண்ட மற்றொரு கப்பலும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையே போக்லண்ட் தீவுகளைச்சுற்றி 200 மைல்களுக்குள் ஆர்ஜென்டீனு போர்க்கப்பல் வந்தால் மூழ்கடிக்குமாறு பிரிட்டிஷ் அரசு தனது கடற்படையினருக்கு பணித்துள்ளது.

நாளை (இன்று) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பிரிட்டனின் பிரகடனம் அமுழுக்கு வருகிறது.

இதே நேரத்தில் 200 மைல் யுத்த பிராந்தியத்திற்கு உள்ளே ஆர்ஜென்டீனு யுத்தக்கப்பல் அணிவகுத்து நிற்பதாக பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார் ஒருகப்பல்கள் கடல் பகுதியிலும் மற்றும் கப்பல்கள் துறைமுகத்திலும் காணப்படுவதாகவும் அவர்

(8ம் பக்கம் பார்க்க)

# புதிய பாராளுமன்றம் செல்ல

# கூட்டணி முடிவு!

## கிளிநொச்சிப் பிரச்னை:

## செயற்குழு நடவடிக்கை

(நமது மாவிட்டபுரம் நிருபர்)

**கோட்டே ஸ்ரீ ஜயவர்த்தன புரத்தில் அமையவிருக்கும் புதிய பாராளுமன்றத்திற்கு செல்வதென்றும், அதுபற்றி மேலும் ஆலோசிப்பதற்கு இன்றைய சூழ்நிலையில் எவ்வித அவசியமும் இல்லையென்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்தியசெயற்குழு முடிவு செய்துள்ளது.**

கூட்டணி செயற்குழுக் கூட்டம் தெல்லிப்பழையிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தற்காலிக அலுவலகத்தில் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் நேற்று நடந்தது.

பாராளுமன்ற உறுப்பினர்களான பண்டிதர் கா. பொ. இரத்தினம், திரு. ரி. இராஜலிங்கம், திரு. வி. தர்மலிங்கம், திரு. ஆர். சம்பந்தன், கூட்டணி செயலதிபரும், எதிர்க்கட்சி முதல்வருமான திரு. அ. அமிர்தலிங்கம் ஆகியோரும் மாவை சேனாதிராஜா, மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு. ந. இராஜேந்திரன் உட்பட மற்றும் செயற்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

### கிளிநொச்சி பிரச்னை

காலை 10 மணிக்கு ஆரம்பமான கூட்டம் பிற்பகல் 2.30 மணிவரை நடைபெற்றது.

கிளிநொச்சித் தொகுதியை தனி மாவட்டமாக்குவது தொடர்பாக எழுந்துள்ள பிரச்னை பற்றி இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது. அதுபற்றி ஆராய நியமிக்கப்பட்ட உபகுழுவின் இடைக்கால அறிக்கை இன்றைய கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து அதிலுள்ள விபரங்கள்குறித்து பரிசீலிக்கப்பட்டது.

இக்குழுவின் இறுதிஅறிக்கை கிடைத்த பின்னர் தனிமாவட்டக் கோரிக்கை பற்றி ஆலோசிப்பதாக தீர்மானிக்கப்பட்டது.

### மூவர் குழு நியமனம்

செயற்குழு உறுப்பினர்கள் இக்கோரிக்கை குறித்து எழுந்துள்ள நிலைமைகள் குறித்தும் இதன்மீது எடுக்கக்கூடிய நடவடிக்கைகள்பற்றியும் கலந்துரையாடிய பின்னர். கிளிநொச்சி தனி மாவட்டக் கோரிக்கை தொடர்பாக சில நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், அதற்காக கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம், செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம், திருமலை எம். பி. திரு. ஆர். சம்பந்தன் ஆகியோரைக் கொண்ட குழு ஒன்றும் தெரிவாகியது.

### ஆறு விஷயங்கள் பரிசீலனை

இக்குழு மேற்கொள்வதாக முடிவு செய்யப்பட்ட விடயங்கள் வருமாறு:

(1) கிளிநொச்சி தனி மாவட்டக் கோரிக்கைபற்றி ஆராய நியமிக்கப்பட்ட கூலேடணிஉபகுழு முன்னிலையில் அத்தொகுதி மக்களால் தெரிவிக்கப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்ற அரசாங்கத்தை வலியுறுத்தி வேண்டிய ஒழுங்குகளைச் செய்தல்.

(2) கிளிநொச்சியின் மேலதிக அரச அதிபர் ஒருவரின் பொறுப்பின் கீழ் அரசாங்க

(8ம் பக்கம் பார்க்க)

அவுஸ்திரேலிய றோட்டரி கழகம்

## யாழ் பொது நூலகத்திற்கு 10,600 ரூபா வழங்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ். பொதுசன நூல்நிலையத்திற்கு அவுஸ்ரேலியாவிலுள்ள பெல்கிரேவ் றோட்டரிக்கழகம் 10, 600 ரூபாவை வழங்கியுள்ளது,

யாழ்ப்பாணம் றோட்டரிக் கழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் இந்நிதி இம்மாதம் 19ம் தேதி யாழ். றோட்டரிகழக காரியாலயத்தில் வைத்து யாழ். மாநகர முதல்வர் திரு. இராசா விசுவநாதனிடம் கையளிக்கப்படும்

வன்முறை சம்பவங்களில் பலியானவர்களின் குடும்பங்களுக்கும் 5300 ரூபாவை பெல்கிரேவ் றோட்டரிக்கழகம் அனுப்பி வைத்துள்ளது. பலியானவர்களின் குடும்பங்கள் பற்றிய விபரங்கள் சேகரிக்கப்பட்டபின்னர் யாழ். றோட்டரி கழகம் இப்பணத்தை அக்குடும்பங்களுக்கு வழங்கும்.

(க)

## பாரத செயற்கைக் கோள் தொடர்ந்து செயல்படுகிறது

புதுடில்லி ஏப். 11

விண்வெளியில் வலம் வந்து கொண்டிருக்கும் பாரதத்தின் செயற்கைக்கோள், இன்று நண்பகல் 12.45 மணிக்கு, பங்களூரிலுள்ள கட்டுப்பாட்டு நிலையத்திற்கு சமிக்ஞை கொடுத்தது.

பிற்பகல் 1.05 மணிக்கு கட்டுப்பாட்டு நிலையத்திலிருந்து கட்டளை அனுப்பப்பட்டது. கோளில் உள்ள மோட்டார் ஒன்று இயங்க மறுத்ததனால் சிறிது கோளாறு ஏற்பட்ட போதிலும் பின்னர் கட்டுப்

(8ம் பக்கம் பார்க்க)

## விஜயத்தை ரத்துச் செய்தார்!

வாஷிங்டன் ஏப். 11

ஐ. நா. பிரதம செயலாளர் தற்போதைய சர்வதேசநெருக்கடி நிலை காரணமாக ஐரோப்பிய நாடுகள் சுற்றுப் பயணத்தை நிறுத்திக் கொண்டு நியூயோர்க் திரும்பியுள்ளார்.

போக்லண்ட் நிலைமைகுறித்து பிரிட்டன், ஆர்ஜன்டீனுவுடன் தான் தொடர்பு கொண்டிருப்பதாகவும், அமெரிக்காவின் சமரச முயற்சிக்கு வழிவிட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

(ரு)

## பிரம்புதட்டிகளை வழங்க முடிவு

(பண்டத்தரிப்பு)

சங்கானை அரசினர் வைத்திய சாலையில் மழைகாலங்களில் வார்ட்டில் தங்கியிருக்கும் நோயாளர்கள் அனுபவித்துவரும் சிரமங்களை நீக்குமுகமாக பிரம்பிலான தட்டிகளை கொள்வனவு செய்து வைத்தியசாலை நிர்வாகத்திடம் அன்பளிப்புச் செய்வதென்று வட்டுக் கோட்டை லயன்ஸ் கழகம் தீர்மானித்துள்ளது.

(க)

## போலி பங்கீட்டு அட்டை

சென்னை. ஏப். 11

தர்மபுரி மாவட்டத்தில் 26 362 போலிப் பங்கீட்டு அட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இது தொடர்பான விசாரணை மாவட்ட கலெக்டரினல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(கு)

### அறிவித்தல்

'ஈழநாடு' காரியாலயத்தின் சகல பிரிவுகளும் 63, சிவன்கோவில் மேற்குவீதி, (மானிப்பாய் வீதி) கட்டிடத்தில் வழமைபோல் செயல்படுகின்றது என்பதை அறியத்தருகின்றோம். விளம்பரம்- மற்றும் ஏனைய சகல விடயங்களுக்கும் இதே முகவரியில் தொடர்புகொள்ளவும். இரவு- பகல் டெலிபோன் தொடர்புகளுக்கு 8126.

நிர்வாகி.

## நாமக்கலில்பெரும்தீவிபத்து! 15லொறிகள், கடைகள்நாசம்!

சென்னை, ஏப். 11

நாமக்கலில் ஏற்பட்டபெரும் தீ விபத்தில் 15 லொறிகள், தொழிற்சாலைகள் 6 தேநீர்க் கடைகள், 7 பெட்டிக்கடைகள் எரிந்துநாசமாகின.

தீயணைக்கும்படையினர் செய்தி அறிந்து ஸ்தலத்துக்கு விரையுமுன்னரே பெரும்பகுதி எரிந்து சாம்பலாகிவிட்டது.

நேற்றுநடந்த இத்தீவிபத்தின் சேதம் ஐம்பது லட்சம் ரூபா என்று மாவட்ட கலெக்டர் திரு. எஸ். ஆர். கறுப்பன் தெரிவித்தார்.

விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகின்ற போதிலும் தீவிபத்துக்கான காரணம் உடனடியாக அறிவிக்கப்படவில்லை.

(கு)

### மணிவாக்கு

வருவாய்க்குத்தக்க வாழ்க்கை இல்லாதபொழுது செல்வராவார் ஒருவரும் இலர்; அது உள்ளபொழுது வறியவராவார் மிக அரியர்.

—நாவலர்—

# நமது நோக்கு

## ஓர் புதிய நூற்றுண்டு

இருபத்தோராம் நூற்றுண்டு பிறப்பதற்கு இன்னும் பதினேழு வருடங்கள் இருப்பினும், தமிழ் மக்களைப் பொறுத்தளவில் இன்னும் இருதினங்களில் உதயமாகும் புதுவருடம் பாரதி நூற்றுண்டு நிறைவு வருடம் என்ற வகையில் ஓர் புதிய நூற்றுண்டின் துவக்கமெனக் கொண்டால் என்ன?

இவ்வாறு சிந்தித்து வினவ காரணங்கள் பல. தாழ்ந்த தமிழகத்தைக்கண்டு, அதன் இழிநிலையில் கவலைகொண்டு தமிழரின் குறுகிய மனப்பான்மை, தமிழ்மொழியின் சீர்கெட்ட நிலை— இவற்றையெல்லாம் கண்டித்து கவி மழை பொழிந்தார் பாரதியார்.

இளைஞனுகவே மறைந்த புலவர்உலகின்மகாகவிகளில் ஒருவராக பல நாடுகளிலும் போற்றப்படுபவர்; இன்று, அவர் கடிந்த குறைகளெல்லாம் நீங்கி, தமிழ் மக்கள்— தங்கள்தாயகத்திலே, தாம் வாழும் பிற, பிறதேசங்களிலே தலை நிமிர்ந்து மதிப்புடனும் மனநிறைவுடனும் வாழ்கின்றுர்களா என விஞவுவாராயின் எமது பதில் என்ன?

அவர் கடிந்த குற்றங்கள் என்ன என்று தெரியாத பாமரர்கள் எம்மத்தியில் இன்னும் இருக்க நியாயமுண்டா? மனிதனை மனிதன் இழிவுபடுத்தும் கொடுமை முற்றுக நீங்கிவிட்டதா?

தமிழில் பேச, தமிழில் பாட, தமிழுக்காக உழைக்கத் தயங்குபவர்கள் இன்னும் உண்டா?

எக்கட்சியினராயினும், எக் கொள்கையினராயினும் எம்மதத்தினராயினும், செய்கிற தொண்டு தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும் பயன்படுகிறதா?

தமிழ் மாணவர்களும், அவர்கள் தம் ஆசிரியர்களும் தங்களாலியன்றளவு தமிழில் பயின்று மேற்கே வளரும் புத்தம் புதிய கலைகளைத் தாம் புரிந்துகொள்ள தமிழில் புத்தகங்கள், சஞ்சிகைகள், ஆராய்ச்சி நூல்கள் ஊற்றெடுத்துவெளிவருகின்றனவா?

தமிழிலேயே பேசுவேன்; தமிழிலேயே எழுதுவேன்; எண்ணுவேன். என்று தமிழ் மக்கள் கொண்ட தம் சபதத்தைபூர்த்திசெய்துவிட்டனரா? அல்லது தொடர்ந்து கடைப்பிடிக்கின்றனரா?

அது உண்மையானுல் தமிழிலே கவிதைகள், தமிழிலே கதைகள், தமிழிலே நாடகங்கள்; தமிழிலே இசைகள் — இவைகளை யாரும் எங்குச் சென்றுலும் பார்க்கலாமா? தமிழில் விஞ்ஞானம்எவ்வளவுதூரம் சென்றிருக்கிறது?

புரட்சிக் கவிஞர் பாரதியார் இந்த நூற்றுண்டு விழாவில் உயிர்த்தெழுந்து இவ்வித விஞக்களை எழுப்ப உரித்துடையவர்.

பாரத சுதந்திரம், அதன் விளைவாகிய இலங்கைச் சுதந்திரம் வெறும் ஏமாற்றத்தில் முடிந்ததென்று நாம் கைவிரிக்கவேண்டியதில்லை. அதே சமயம் குதூகலிக்கவும் காரணமில்லை.

தாய்மொழிப்பற்று, தன் இனப்பற்று முன்னில்லாததோர் விழிப்புணர்ச்சி, தமிழர்களிடையே தொழிற்படுவதை மகாகவி மறுக்கத் துணியார்.

தூங்கினவர்கள் பலர்விழித்திருக்கின்றனர்; துக்கப்படும தமிழ்மக்களின் துயரைத் துடைக்க சங்கங்களும், கட்சிகளும், சட்ட அமைப்பும் அரசியற் போராட்டங்களும், சமூகக் கிளர்ச்சிகளும் தளர்ந்துபோகாமல் தொடர்ந்து நடக்கின்றன; காரியசித்தி எட்டத்திலே!

இருப்பினும் மகாகவியின் பெருமுழக்கமெங்கே! எமது சுத்-கிர வாழ்வின் சிறுமை என்னே!

35 வருட சுதந்திர வாழ்வில் பல. அல்லல்களுக்குக் கிடைத்த பயன், 'தமிழ் ஒரு தேசியமொழி' என்ற விளம்பரம் அரசியல் சாசனத்தில் அமைதியாக ஒளித்திருக்கின்றது.

தமிழ்மக்கள் அரசுடன் தொடர்புகொள்ள தமிழ் போதாத நிலை தொடர்கின்றது; அரசாங்கமே நடிக்கும் நயவஞ்சகத்துக்கு முன்மாதிரியாகவிருக்கின்றது; இதனை மூடி மறைக்கும் எந்த நடவடிக்கையும் தோல்வியடையும்.

தமிழ்சமூகத்தில் எவ்வளவு தூரம் தமிழ் உயிர்த்துடிப்புடன், இயல், இசை, நாடகமென்ற துறைகளில் வளர்ந்துவரும்போதும், எங்கள் மத்தியில் என்றும் இருந்த எத்தர்களும் ஏமாளிகளும் இன்றும் உளர். பொதுமக்கள் கவனத்துக்குரியது இது.

ஏமாற்றி வாழ்பவன் எத்தன்; ஏமாறுபவன் ஏமாளி. தன்னுணர்வு அற்ற மக்கள் ஏமாற்றப்படுவதும், அதிகாரவேட்கை பிடித்து அதில் உருசிகண்ட அரசியல்வாதிகள் 'தமிழ், தமிழ் என்று ஏமாற்றி வாழும் காலம் இன்றும் முடிவடையவில்லை.

இப் புத்தாண்டில் நாம் விரும்பிக்கோருவது''தனித் 'தமிழ்' சட்டம் அல்ல; அநியாயமான தனிச்சிங்களச் சட்டத்துக்கு, பழி வாங்குதல் அந்தவகையில் அல்ல, 'தனித்தமிழ், என்று சொல்லும்போதே மகாகவியை அவமதிப்பது போல் தோன்றும்.

உலகம் கண்ட உன்னத நாகரிகங்களில் ஒன்றுன தமிழ் நாகரிகத்தை வளர்த்த இம்மொழி இன்றைய உலக அறிவு வளர்ச்சிக்குரிய ஆற்றலைப் பெருத நிலைக்கு யார் காரணம்?

பலதிறப்பட்ட அறிவைப் பயில ஆங்கிலம் அவசியம்; வேறு மொழிகளும் பயன் தரும்; ஆனுல் தமிழில் ஆரம்பமான கல்வி, பல்கலைக்கழகத்தில் தொழில் நுட்பக்கல்லூரியில் மருத்துவ பொறியியல், கணக்கியல் போன்ற துறைகளில் துள்ளிவிளையாடும் ஆற்றல் அற்று இன்னும் தூங்கிக் கிடக்கிறதே!

இந்த நிலைமையை நாம் உணர்ந்து தமிழ் கூறும் நல்லுலகம் இதுகாறும் சொல்லிவந்த புருடாக்களையும், நொண்டிச்சாட்டுகளையும் கைவிட்டு இந்த அவசிய கடமையில் இறங்குவதே ஓர் புதுமை நூற்றுண்டை, ஆரம்பித்து உலகம் உச்சி மேற்கொள்ளும் மகாகவியை உண்மையில் கௌரவிக்கும் வழி.

# "எமது சுதந்திரம், கலாசாரம் பாதுகாக்கப்பட வேண்டும்"

### - வவனியா எம். பி

[வவனியா]

''ஆட்சி அதிகாரம், அபிவிருத்தியோடு இணைந்து அமுல் செய்யப்படவேண்டும். இந்த வகையில்தான் வடக்கு-கிழக்கு மாகாணம் அபிவிருத்தியில் செயல்படுகிறது.''

இவ்வாறு வவனியா எம்.பி. திரு. தா. சிவசிதம்பரம் பூவரசன் குளம் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் கூறினுர்.

உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. குணநாயகம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் வவனியா எம். பி. தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது:

''ஏழை விவசாய மக்கள் தமது தேவைகளை சிரமம் இல்லாது செய்வதற்கு அரச நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் செயல்பட வேண்டும். எங்கள் சமுதாயத்தின் உரிமைக்காகவும், இனத்தினுடைய சுதந்திரத்தையும், கலாசாரத்தையும் நாம் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

''ஏனைய மாவட்டங்களைவிட வடக்கு, கிழக்கு பகுதியில் மக்களுக்குரிய வாழ்கை வசதி மிகக் குறைவாகவுள்ளது.''

பூவரசன்குளம் வித்தியாலய மாணவிகள் வரவேற்புப் பா பாடினுர்கள். திரு. மு. பாலச்சந்திரன கி அ. சங்கத் தலைவர் வரவேற்புரை நிகழ்த்திஞர். இவ்வைபவத்தில் தலைவர்கள் உட்பட ஜனுப் மு. முத்து முகமட், திரு.கே. பரமநாதன் ஆகியோரும் உரையாற்றினர். [வெ]

## போக்லண்ட் தீவுகள் நெருக்கடி:

# சமரசப் பேச்சு வார்த்தையில் முட்டுக்கட்டை!

புவனஸ்அயர்ஸ் ஏப். 11 போக்லண்ட் தீவுகளின் நெருக்கடியைத் தீர்க்குமுகமாக ஆர்ஜென்டீனு ஜனுதிபதியுடனும், இராணுவத் தலைவர்களுடனும் அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. அலெக்சாண்டர் ஹெய்க் நடத்திய சமரச பேச்சுவார்த்தைகள் முட்டுக்கட்டை நிலையடைந்துள்ளதாகஅறிவிக்கப்பட்டது.

போக்லண்ட் தீவுகளின் 200 மைல் யுத்த கடல்பிராந்தியத்தில் காணப்படும் ஆர்ஜென்டீனு கப்பல்கள் நாளையிலிருந்து தாக்கப்படுமென்று பிரிட்டன் தெரிவித்துள்ளது.

(வெ)

# காளான் செய்கையில் கவனம் செலுத்துங்கள்!

### பிரதி அமைச்சர் கோருகிறுர்

[கொழும்பு]

''பெருமளவில் 'காளான்' களைச் செய்கைபண்ணும் பட்சத்தில், பலருக்கு அதிக வருவாயையும், தொழில் வாய்ப்பையும் வழங்கமுடியும். 'காளான்' களையும் மரக்கறிக் கன்றுகளைப்போல வீட்டின் பின்புறத்தே வளர்த்துப் பயனடைய முடியும்''.

இவ்வாறு விவசாய ஆராய்ச்சி பிரதி அமைச்சர் திரு. கே. டி. எம். ஸி. பண்டார இலங்கைப் பெண்கள் சம்மேளனத்தவரால் ஒழுங்குசெய்யப்பட்ட 'காளான்' செய்கை பற்றிய கருத்தரங்கில் கலந்து கொண்டு குறிப்பிட்டார்.

பிரதி அமைச்சர் பண்டாரா மேலும், அங்கு பேசுகையில்; நமதுநாட்டில் ''காளான்'' செய்கை பல வருடங்களாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றபோதிலும், நன்கு திட்டமிட்டபடியோ, விஞ்ஞான முறைப்படியோ அவை செய்கைபண்ணப்படவில்லை.

ஒவ்வொரு வீட்டுப் பெண்ணும், 'களான்' பயிர்ச் செய்கையை சிறப்பாக மேற்கொள்ளும் பட்சத்தில் உள்நாட்டில் அதனை விற்பனை செய்வதுடன் மேலதிகமான உற்பத்தியாகும் பட்சத்தில் ஏற்றுமதி செய்ய முடியும் என்று தெரிவித்தார்.

(கி)

# புதிய பாராளுமன்ற திறப்புவிழா நிகழ்ச்சிவிபரம்

[கொழும்பு]

கோட்டை ஸ்ரீ ஜயவர்த்தன புராவில் இம் மாதம் 29ம் திகதி புதிய பாராளுமன்றத் திறப்புவிழா நடைபெறவுள்ளது.

இதனையொட்டி அன்று இடம்பெறவுள்ள நிகழ்ச்சிகள் பற்றி தகவல் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட செய்தி கூறுவதாவது:

மு. ப. 9.00 அழைப்பாளர்கள் வந்து சேர்தலும், தமது ஆசனத்தில் அமர்தலும்.

மு. ப. 9.30 பாராளுமன்ற உறுப்பினர்கள் வந்து சேர்தல்.

மு. ப. 9.45 சபாநாயகரும், பிரதமமந்திரியும் பெயர்ப பொறிப்பட்டயப் பதிவை வெளிப்படுத்துவதன் மூலம் சபாநாயகரிடம் மணியகத்தைக் கையளித்தல்.

மு. ப. 10.00 பாராளுமன்ற உறுப்பினர்கள் சபா மண்டபத்தில் அமருவதற்கான அழைப்பு மணி ஒலித்தல்.

மு. ப. 10.15 ஜனுதிபதியும், திருமதி. ஜே. ஆர். ஜெயவர்த்தனுவும் வந்து சேர்தல். அவர்கள் சபாநாயகராலும், பிரதமமந்திரியாலும் வரவேற்கப்படல். குடியரசுக்கொடி பறக்கவிடுதல். தேசிய கீதம். அணிவகுப்பு மரியாதை.

மு. ப. 10. 22 ஜனுதிபதி பெயர் பொறி பட்டயத்தைத் திரைநீக்கம் செய்தல்.

மு. ப, 10.25 ஜனுதிபதி, சபாநாயகர் அவர்களால் சபா மண்டபத்துள் அழைத்துச் செல்லப்படல்.

மு. ப. 10.28 அரசியல் அமைப்பின் பிரிவு 33(1)இற்கு அமைவாக ஜனுதிபதி பாராளுமன்ற அமர்விற்குத் தலைமை தாங்குதல். ஜனுதிபதி பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்துதல். பிரதம மந்திரி உரைநிகழ்த்துதல். ராஜாங்க அமைச்சா உரை நிகழத்துதல். திரு. எம். சேனநாயக பா. உ. உரைநிகழ்த்துதல. திரு. சரத் முத்தெட்டுவேகம பா. உ. உரைநிகழ்த்துதல்.

இதனைத் தொடர்ந்து ஜனுதிபதி சபா மண்டபத்திலிருந்து புறப்படுவார். அன்றைய பாராளுமன்ற நிகழ்ச்சிகள் முடிவுபெறும். (வெ)

# மக்கள் கருத்து

## கூட்டணிக்கு நன்றி

கடந்த 17—2—82ல் 'ஈழநாடு' பத்திரிகையில், 'மக்கள் கருத்து' பகுதியில் 'முஸ்லிம் ஒருவரும் இல்லையே!' என்ற தலையங்கத்தில் வெளிவந்த கருத்தை உடனடியாகவே கவனத்தில் எடுத்து யாழ். மாவட்டத்தில் நியமனம் பெற்ற ஒரு விசேட சேவை அதிகாரியைப் பதவி இழக்கச் செய்து அதே பதவியை ஒரு முஸ்லிம் வாலிபருக்கு வழங்கச் செய்து, யாழ். முஸ்லிம்களின் நன்மதிப்பைப் பெற்றுக் கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கு மனமார்ந்த நன்றி உரித்தாகுக. அத்தோடு எனது கருத்தை பத்திரிகையில் வெளிவரச் செய்து முஸ்லிம் மக்களின் குறை நீங்க வழிவகுத்த 'ஈழநாடு' பத்திரிகைக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதேபோல் யாழ். முஸ்லிம்களின் நீண்ட காலக் குறையாகவுள்ள கிராம சேவையாளர் நியமனத்திலும் கவனமெடுத்து நடந்துமுடிந்த நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்திருக்கும் முஸ்லிம் வாலிபர்களில் ஒருவரையாவது நியமிக்க துரித நடவடிக்கை எடுத்து யாழ். முஸ்லிம் மக்களின் நீண்ட காலக் குறையை நிவர்த்தி செய்ய தமிழர் விடுதலைக் கூட்டணி நடவடிக்கை எடுக்குமா?

ஏ. ஸி. எம். பரீத்
யாழ்ப்பாணம்.

## வெளிநாட்டு வங்கிகள்

# மாகாணங்களில் கிளை திறக்க அரசு அனுமதி மறுப்பு!

[கொழும்பு]

வெளி மாகாணங்களில் கிளைகளைத் திறப்பதற்கு அந்நிய நாட்டு வங்கிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இத்தசவலை வெளியிட்டுள்ள நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டி மெல், பல வெளிநாட்டு வங்கிகள், மாகாணங்களில் கிளைகளைத் திறப்பதற்கு அரசாங்கத்திடம் அனுமதி கோரியுள்ளனவென்றும் ஆனால் அரசாங்கம் இக்கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளவில்லையென்றும் தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது: ''13 அந்நிய வங்கிகள் கொழும்பில் இயங்கி வருகின்றன. இந்தியன் வங்கி மட்டும்தான் மாத்தறையிலும் அனுராதபுரத்திலும் கிளைகளை நிறுவ அனுமதிக்கப்பட்டுள்ளது. இக்கிளைகள் விவசாயத் திட்டங்களில் ஈடுபடுபவர்களுக்கு நிதி உதவி வழங்கி வருகின்றன.''

அந்நிய வங்கிகளின் நடவடிக்கைகளால் இலங்கையின் பொருளாதாரம் பாதிக்கப்பட மாட்டாது என்று அமைச்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## கம்யூ. கட்சி யாழ். மாவட்டக் கிளை

# மேதின ஊர்வலம் - கூட்டம் வடமராட்சியில்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சியின் யாழ். மாவட்டக் கிளை இம்முறை மேதின ஊர்வலத்தையும் பொதுக்கூட்டத்தையும் வடமராட்சியில் கொண்டாடுவதற்குத் தீர்மானித்துள்ளது.

மேதின ஊர்வலம் கரணவாய் மூத்தவிநாயகர் கோவிலடியிலிருந்தும் துன்னாலை கலிகைச் சந்தியிலிருந்தும் ஆரம்பமாகி, நெல்லியடியில் இணைந்து வதிரியூடாக மேதினப் பொதுக்கூட்டம் நடைபெறும் மாலிச் சந்தியை வந்தடையும். லங்கா தொழிற்சங்க சம்மேளனம், பொதுச்சேவை தொழிற்சங்க சம்மேளனம், கம்யூனிஸ்ட்வாலிபர் சம்மேளனம், தேசிய மாணவர் சங்கம், தேசிய விவசாயிகள் சங்கம், மாதர் சங்கம் முதலியன ஒன்றிணைந்து நடாத்தத் தீர்மானித்துள்ளன.

இதர தொழிற்சங்கங்களுக்கும் இம்மேதின விழாவில்பங்கு கொள்ளுமாறு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளன.

லங்கா தொழிற் சங்க சம்மேளனத்தின் யாழ். மாவட்டச் செயலாளர் திரு. எஸ்.விஜயானந்தன் தலைமையில் மேதினக் கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது.

# சீனவில் புதிய பொலிஸ்படை

டோக்கியோ, ஏப். 11.

''புதிய பொலிஸ் படைசளை நிறுவ சீன திட்டமிட்டுள்ளது. சீனவில் குற்றங்கள் அதிகரிப்பதைத் தடுப்பதே இதன் நோக்கமாகும்'' என்று ''கியோடோ சுஷின்'' என்னும் ஜப்பானிய செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

சீன அரசின் இந்த நடவடிக்கை, சீனவில் குற்றங்கள் பெருகி வருகிறது என்பதற்கு சான்ருகும் என்று மேற்படி செய்தி தெரிவிக்கிறது.

''கலாசாரப் புரட்சிக்கு'' முந்திய ஆண்டுகளை விட அதிகமாக இப்போது சீன இளைஞர்களிடையே குற்றங்கள் அதிகரித்துள்ளன. கொலைகள், தனிநபர் அல்லது கூட்டுக் கொள்ளைகள், ரயில்ப் பாதைகளிலும் துறைமுகங்களிலும் கொள்ளைக் கும்பல்களின் நடவடிக்கைகள் ஆகியவை அதிகரித்துள்ளன. சட்டவிரோதக் கடத்தல் வணிகமும், கொள்ளை லாபமடித்தலும், லஞ்சமும் பெருகியுள்ளன. சென்ற ஆண்டில் மட்டும் சட்டவிரோத கடத்தல் வணிகம் பற்றிய 3,500 வழக்குகளும், பெரும் வர்த்தகச் சூதாட்டம் பற்றிய 10,000 வழக்குகளும் பீக்கிங்கில் பதிவாகியுள்ளன'' என்று கம்யூனிஸ்ட் கட்சியின் ஏடான ''ரென்மின்ரிபோ'' குறிப்பிட்டுள்ளது. 80ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 81ல் பீக்கிங்கில் பொருளாதாரக் குற்றங்கள் இரு மடங்கு அதிகரித்துள்ளது என்று ''குவாங்மிக்ரிபோ'' என்னும் ஏடு கூறுகிறது.

''சீனவில் குற்றங்கள் பெருகுவதற்குக் காரணம், ''கலாசாரப் புரட்சியின் தீய விளைவுகளே'' என்று பீக்கிங் அதிகாரிகள் கூறுகின்றனர். சீனவில் குற்றங்கள் பெருகுவதற்கு, இது மட்டுமே காரணமல்ல. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருவதாலும், சீனவில் குற்றங்கள் பெருகுகின்றன. களையெடுப்புகள், பயனுக இன்றைய சீன இளைஞர்களிடையே விரக்தி நிலை ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாகவும் சீனவில் குற்றங்கள் அதிகரிக்கின்றன. சீனப் பொருளாதாரத்தில் தனியார் துறை மீண்டும் நிறுவப்பெற்றுள்ளதாலும், அன்னிய மூலதனம் அதிக அளவில் பயன்படுத்தப்படுவதாலும், சீனவில் குற்றங்கள் பெருகி வருகின்றன'' என்று மேற்படி ஏடு செய்தி வெளியிட்டுள்ளது.

## தடை விதிப்பு

லண்டன், ஏப் 11

சவூதிஅரேபியா கிழக்குப் பகுதியில் வாழும் மக்கள் ஏனைய பகுதிகளுக்குச் செல்ல தடை விதிக்கப்பட்டிருப்பதாக குவைத்திலிருந்துவந்த செய்திகள் கூறுகின்றன.

இதற்குரிய காரணம் தெரிவிக்கப்படவில்லை. இதற்குரிய காரணத்தை அறியச்சென்ற குழுவை முடிக்குரிய இளவரசர் சந்திக்க மறுத்துவிட்டார்.

(க)

# சிறுகுற்றம் புரிவோர் மீது நீதிமன்ற விசாரணை இல்லை

(கொழும்பு)

சிறு குற்றங்களைப் புரிவோருக்கெதிராக நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல்செய்யப்படுவது நிறுத்தப்படவிருக்கின்றது. இதுசம்பந்தமாக நீதி அமைச்சினுல் புதிய திட்டமொன்று மேற்கொள்ளப்படவிருக்கின்றது.

தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் அநேக கைதிகள் குற்றங்களைப் புரிந்தோராகவே காணப்படுகின்றனர்.

நீதிமன்றத்தில் இவர்கள் விசாரணைகளுக்காகக்கொண்டுவரப்பட்டு குற்றவாளிகளாகக் காணப்படும் பட்சத்தில், சிறைத்தண்டனைகளும் வழங்கப்படுகின்றன. இதனுல் இத்தண்டனையை அனுபவிக்கும் கைதிகள் விரக்திநிலையடைந்து விடுதலையானதும் பெருங் குற்றங்களைப் புரிய எத்தனிப்பர். ஆகவே இவ்வாருன நிலைமை ஏற்படாது சிறு குற்றங்களைப் புரிந்தோர் தாம் புரிந்த குற்றத்தை உணர்ந்து மீண்டும் சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியவராக மாற்றும் பொருட்டே அவர்கள்மீது நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படாத விதத்தில் புதிய திட்டம் வழி அமைக்கிறது என்று நீதியமைச்சின் உயரதிகாரியொருவர்தெரிவித்தார்.

இப்புதிய திட்டத்தின்படி, சிறு குற்றங்களைப் புரிவோரையும், முறைப்பாட்டுக்காரரையும் பொலிஸார் விசாரித்து அவர்கள் மத்தியிலேயே சமரசத்தை ஏற்படுத்துவர். அத்துடன் குற்றம் புரிந்தவர்பற்றியும், அவரது குற்றம்பற்றியும் அறிக்கையொன்றைத் தயாரித்துவைத்தார்.

இவ்வாறு சமரசம் செய்பப்பட்டபின்னரும், சந்தேகநபர் மீண்டும் குற்றச்செயல்களை மேற்கொண்டால் இரண்டாவது தடவையாகக் குற்றம் புரிந்தவராகக் கணிக்கப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவாரென்றும் தெரிவிக்கப்பட்டது.

(கி)

# 'தகவம்' வழங்கும் தமிழ் நாவல் போட்டி

[கொழும்பு]

ஈழத்துத் தமிழ் நாவல்களுக்கு தகுதிகண்டு ஆண்டுதோறும் பரிசில் வழங்கத் தமிழ்க் கதைஞர் வட்டம் [தகவம்] தீர்மானித்துள்ளது.

1981ம் ஆண்டுக்கான பரிசில்களை வழங்குவதற்கு இப்போது முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

பரிசில் தகைமைக்குப் போட்டியிட விரும்பும் நாவலாசிரியர்கள் கீழ்வரும் நிபந்தனைகளை கவனத்தில் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். போட்டிக்கு அனுப்பப்படும் நாவல் 1981ம் ஆண்டில் நூல்வடிவாக அல்லது பத்திரிகையில் தொடராக வெளிவந்ததாகவும், முதற்பிரசுரயாகவும் இருத்தல் வேண்டும்.

ஈழத்து மக்களது வாழ்க்கையைப் பிரதிபலிப்பதாக அமைதல் வேண்டும். ஆசிரியரது சொந்தப் படைப்பாகவுள்ள நாவல்கள் வேருகவும், தழுவல் நாவல்கள் வேருகவும் மதிப்பீடு செய்யப்படும்.

தழுவல் நாவலைப் போட்டிக்கு அனுப்ப விரும்புவோர், அந்த நாவலின் முதல் நூல் பற்றிய விபரங்களையும், தழுவல் எந்தளவுக்கு, எந்தவகையில் மேற்கொள்ளப்பட்டது என்பதையும் விபரமாக எழுதி நாவலுடன் அனுப்புதல் வேண்டும். ஆசிரியரது சொந்தப் படைப்பாகவுள்ள நாவல்களில் மூன்றிற்கு பரிசில் வழங்கப்படும். மொத்தத் தொகை ரூ. 1000 தழுவல் நாவல்களுக்கு ஒருபரிசு உண்டு ரூ. 100.

நூல்வடிவில் வெளியான நாவலாயின் அதன் மூன்று பிரதிகளும், தொடர்கதைப் பிரசுரமாளுல் அதன் தொகுப்பு என்றும் செயலாளரது முகவரிக்கு, பதிவுத்தபால் மூலம் ஜூன் மாதம் 28ம் திகதிக்கு முன்னர் திரு. வேல் அமுதன். 67, கிருண்ட்பாஸ்ரேட், கொழும்பு 14 என்ற முகவரிக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

[வெ]

# இளம் மனைவி தற்கொலை!

(மண்டைதீவு)

குடும்பத்தில் ஏற்பட்ட சிறு தகராறு; ஒரு இளம் மனைவியின் உயிரைப் பறித்தது. கணவன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்!

மண்டைதீவு கிழக்கைச் சேர்ந்த வசந்தகுமாரி (28 வயது) என்பவரே மரணமாணவராவார்.

சம்பவதினம் கணவர் மது அருந்திவிட்டு வீடு திரும்பியதும் அவருக்கும் மனைவிக்குமிடையே தகராறு மூண்டதாகவும் ஒரு கட்டத்தில் மனைவி நச்சுத்திராவகம் அருந்துவதைக் கண்ட கணவர் அதனைப் பறித்து அருந்தியதாகவும் பின்னர் இருவரும் யாழ் ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்லப்பட்டு அங்கு மனைவி மரணமானதாகவும் கணவர் செ. சுந்தரமூர்த்தி உயிர்தப்பியதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. இவர்களுக்கு மூன்று குழந்தைகள் உண்டு.

யாழ் திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்தியபோது காலஞ்சென்றவரின் சகோதரர் சதாசிவம் தவானந்தராசா சாட்சியம் அளித்தார்.

சாட்சியங்களைப் பதிவு செய்துகொண்ட திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் தற்கொலை என்று தீர்ப்பளித்தார்.

## விபத்து மரணம்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறையில் எரிகாயங்களுக்குள்ளாகி மரணமான பரமலிங்கம் பரமராசா [32வயது] என்பவரின் மரணம் விபத்துமரணமென தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

எரிகாயங்களுக்குள்ளான இவர் யாழ் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானுர். யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் விசாரணை நடத்தினுர்.

காலமானவர் மீன்பிடி இயந்திரத்தை பெற்ருேலால் துப்பரவுசெய்தபோது வாயில் சிகரட்டை புகைத்துக்கொண்டிருந்ததாகவும், அப்போது எதிர்பாராதவிதமாக அவரில் தீப்பிடித்துக்கொண்டதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது; இதனையடுத்து மரண விசாரணை அதிகாரி விபத்து மரணமென தீர்ப்பளித்தார்.

(வெ)

CENTRIC

சென்ட்றிக் விவசாய பம்ப்.



- உலகப் புகழ் ரொபின் பெட்ரல்/மண்ணெண்ணெய் அல்லது யன்மார் டீசல் எஞ்சின் பொருத்தியது.
- நிகர் நிற்க முடியாத எரிபொருட் சிக்கனம். தனித்துவமான தன்னியக்க எரி பொருள் மாற்றும் விசை.
- இடம் மாற்றும் வசதி கொண்ட பாரம் குறைந்தது.
- நிலைத்து நிற்பதற்காக வார்ப்பிரும்பிலும் பித்தளையிலும் உருவானது.
- சென்ட்றிக் - 30 வருடங்களுக்கு மேல் 60,000 பேர் நம்பிப் பாவிப்பது.

விலை: ரூ. 4,750/- முதல்.
1½'', 2'', 3'', 4'' ரகங்களில் கிடைக்கும்.

Mel Ads

ஜினசேன லிமிட்டெட்,
4, உணுப்பிட்டியா வீதி,
கொழும்பு 2.
தொலைபேசி: 26558/9

## பங்கு வழங்குதல் இப்பொழுது நடைபெறுகிறது

# சீமெந்துப் பெருந்தொழிலில் நீங்களும் முதலிடலாம்

அதிகரித்துவரும் சீமெந்து தேவையை உள்ளூர் உற்பத்தி சமாளிக்க முடியாமலிருக்கிறது.

இதனையும், காலப்போக்கில் இது மேலும் கூடும் என்பதையும் அறிந்துள்ள இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம், இவற்றை நிறைவேற்றுவதற்காக லங்கா சீமெந்து லிமிடெட்டை ஆரம்பித்துள்ளது.

தொழிற்சாலை, துறைமுகப்பாலம், மற்றும் துணைச்சேவைகளைக் கொண்ட முற்றிலும் தன்னியக்க முறையில் அமைந்த தொகுதி ஒன்றினை, லங்கா சீமெந்து லிமிட்டெட் காங்கேசன்துறையில் பெருமளவிற்குப் பூர்த்திசெய்துள்ளது.

திட்டத்தின் 1 வது கட்ட வேலைகள் இந்த ஆண்டு ஆரம்பித்ததும் 500,000 தொன் உற்பத்தி செய்யப்படும். 1983, ஜூன் மாதத்தில் முடிவடையும் 2 வது கட்டத்தில் உற்பத்தி இரண்டு மடங்காக, அதாவது வருடாந்தம் 10 லட்சம் தொன் உற்பத்தி செய்யப்படும்.

இலாபம் தரும் இந்த முயற்சியில் நீங்களும் சேருங்கள். ஒவ்வொன்றும் 10 ரூபா பெறுமதியான 1.2 கோடி பங்குகள் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன. பங்கு வழங்குகையின் மொத்த பெறுமதி 30 கோடி ரூபா. முதல் ஆண்டிலேயே பங்கிலாபம் பெறும் வாய்ப்புண்டு.

### முதலீட்டு நிவாரணமும் வரிச் சலுகைகளும்

- வரிமதிப்பிடற்குரிய வருமானத்தின் 1/3 பகுதிவரை முதலீட்டு நிவாரணம்
- கம்பெனியின் இலாபங்களின் மீது ஐந்து வருட வரி விடுமுறை
- ஐந்து வருடங்களுக்கு பங்கிலாபங்களுக்கு வரி விலக்கு
- வரி விடுமுறைக்குப் பின்னர் குறைந்த வீத வரி மதிப்பு
- வரி விடுமுறைக்குப் பின்னர் பங்கிலாபங்களின் மீதான வரி நிறுத்திவைக்கப்படமாட்டாது
- வதிவு கம்பெனிகள் பெறும் பங்கிலாபங்களுக்கு வரி இல்லை
- மூலதன இலாபங்களுக்கு வரி இல்லை

பங்கு வழங்குதல் மார்ச் 3 முதல் 1982 ஏப்ரல் 30 வரை

முதலீடு செய்வது பற்றிய விபரங்களைத் தரும் முற்பகர்வின் இலவச பிரதிக்கு இங்கு தரப்பட்டுள்ள கூப்பனை அனுப்பி வையுங்கள்.

நிர்வாக ஆலோசனைப் பிரிவு,
இலங்கை வங்கி,411, காலி வீதி,கொழும்பு - 3.

லங்கா சீமெந்து லிமிட்டெட் பங்கு வழங்குகை மீதான முற்பகர்வின் பிரதியொன்றையும் பங்குகளுக்கான ..............விண்ணப்பப் படிவங்களையும் தயவு செய்து அனுப்பி வையுங்கள்.

பெயர் : ..............................................

முகவரி: ..............................................

லங்கா சீமெந்து லிமிட்டெட்டுடன் சேர்ந்து உறுதியான எதிர்காலத்தை கட்டியெழுப்புங்கள்

**லங்கா சீமெந்து லிமிட்டெட்**

அல்மனுர் கட்டிடம்,302, காலி வீதி,
கொழும்பு - 4. தொலைபேசி: 589126



Phoenix

# குதுப்சாதே மீது கொலை குற்றச்சாட்டு!

தெஹ்ரான், ஏப். 11

**ஈரான் முன்னுள் வெளிநாட்டமைச்சர் ஜனுப் குதுப்சாதே மீது கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது!**

ஜனுப் குதுப்சாதே, அவரது இல்லத்தில்வைத்து கைது செய்யப்பட்டார்.

ஈரானிய நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டில் ஈரானிய மதத் தலைவர் அயத்தொல்லா கொமெய்னியை கொலை செய்து, ஆட்சி பீடத்தைக் கைப்பற்றுவதற்கு ஜனுப் குதுப்சாதே திட்டமிட்டார் என்றும், இச்சதி முயற்சியில் இவருடன் சேர்ந்தவர்களும் கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானின் வெளிநாட்டமைச்சராக 1979 டிசம்பர்முதல் 80 செப்டம்பர்வரை பதவிவகித்த ஜனுப் குதுப்சாதே, ஈரானின் இஸ்லாமிய புரட்சி சம்பந்தமாக பல புத்தகங்களை எழுதியுள்ளார்.

ஈரான் தலைநகரான தெஹ்ரானில் அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் பணயக்கைதிகளாக வைக்கப்பட்டபோது, இதனை எதிர்த்தவர் ஜனுப் குதுப்சாதே என்பது குறிப்பிடத்தக்கது.

---

## படகுசேவை செலவு குறைந்துள்ளது

(மண்டைதீவு)

வேலணை பெருந்தெருக்கள் திணைக்களத்தின் நிர்வாகத்தின் கீழ் நடைபெற்ற தீவுப்பகுதி படகுச் சேவை, வடபகுதி இயந்திரப் பொறியியலாளர்மேற்பார்வையில் தற்போது நடைபெறுவதால் முன்னர் செலவான தொகையில் மாதம் 15,000 ரூபா குறைவாக செலவாகின்றது என்று மேற்படி இயந்திரப் பொறியியலாளர் திரு. நித்தியானந்தன் காவலூர் எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினத்திடம் தெரிவித்துள்ளார்.

---

## இன்றைய பலன்

பங்குனி மாதம் 30ம் திகதி

திங்கட்கிழமை

(12—4—82)

மேடம்: கருடப்பார்வை உங்களை வட்டமிடும். முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு விஷமிகள் திட்டம் போடுவார்கள். சிலருக்கு அன்னிய வாசமும் உண்டு.

இடபம்; காதல் விவகாரங்கள் தலைதூக்கும். இனிமையான சம்பவங்கள் இடம் பெறும். பொருள்வரவுக்கு இடம் ஏற்படும். கண்ணியமான தினம்.

மிதுனம்: செய்யும் தொழிலில் சிரமங்கள் தோன்றக்கூடும் உடல் நலம் சிறிது பாதிக்கப்படலாம் அவதானம் வேண்டும்.

கடகம்: பரம் பொருளின் அருளுக்கு இடமுண்டு பொது மக்களின் ஆதரவைப் பெறுபவர் பொதுப்பணிகளில் ஈடுபடுவார்கள்.

சிங்கம்: கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும். எதையும் சிறப்புடன் செய்வதற்கு விரும்புவீர்கள். வாழ்க்கை ஒளி மயமாகும்.

கன்னி: இதயத்தில் இனிமை தவழும். பகைவர்கள் பணிவர். பரந்த மனத்துடன் செயற்படுவதன் மூலம் பொதுமக்களின் பாராட்டுக் கிடைக்கும்.

துலாம்: வாழ்க்கையில் புதிய விருத்தி தென்படும். சுற்றுடலில் உற்சாகமான வரவேற்புக் கிடைக்கும். அதிக வருவாய்க்கு இடமுண்டு.

விருச்சிகம்: பணவிவகாரத்தில் அதிக கவனம் செலுத்தவும். தொழில்துறையில் சில சிக்கல்கள் தோன்றக்கூடும். தடுமாற்றம் தென்படும்.

தனுசு: பேச்சு வன்மையினால் பெரும்புகழ் கிடைக்கும். பெரிய இடத்துச் சாவகாசம் உங்களுக்குச் செல்வாக்கைத் தேடிதரும்.

மகரம்: தூக்கம் விழிகளைத் தழுவ மறுக்கும். கடந்தகால எண்ணங்கள் அலைமோதும். சஞ்சலப்படக்கூடிய செய்திக்கு இடமுண்டு.

கும்பம்: மாதுருவழிப் பெருமைக்கு இடமுண்டு. மனப்போல் யாவும் நடக்கும் இன்று கல்வியில கொண்டாட்டமும் கிடைக்குல்.

மீனம்: கற்றதால் பயன் கைமேல் கிடைக்கும். தாய் வழிச் செய்தியும். கிடைக்கும். தொழில் புரியும் இடத்தில் செல்வாக்குப் பெருகும்.

சோதிடக் கலாநிதி

திருமலை

க. வேலுப்பிள்ளை

---

## யோகாசன வகுப்புகள்

[வட்டுக்கோட்டை]

வட்டுக்கோட்டை இந்து இளைஞர் கலாச்சார மன்றத்தின் ஆதரவில் ஆழ்நிலைத்தியான வகுப்புகளும், யோகாசன வகுப்புகளும் நடாத்தப்படுகின்றன. இவ் வகுப்புகளை ஐரோப்பிய மகரிஸ் பல்கலைக்கழகப் பேராசிரியர்களான திரு. வில்லி பூரணனந்தா, போஸ் டக்ளஸ் என்பவர்களைக் கொண்டு நடத்துகின்றனர்.

---

## கம்யூனிஸ்ட்கட்சி மேதினம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (மாவோ) இம்முறை நான்கு இடங்களில் மேதினக் கூட்டத்தை நடாத்தவிருக்கின்றது. இதற்கான நடவடிக்கைகளைக் கட்சியின் சார்பிலுள்ள இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம், இலங்கை வாலிபர் சங்க சம்மேளனம், புதிய செங்கொடிச்சங்கம் ஆகியன மேற்கொண்டுள்ளன.

கொழும்பில் நடைபெறும் மேதினக் கூட்டத்தில் கட்சியின் பொதுச்செயலாளர் திரு. என். சண்முகதாசன் உரைநிகழ்த்துவார்.

ஹட்டனில் நடைபெறும் கூட்டத்தில் புதிய செங்கொடிச் சங்கத்தின் தலைமைக் குழுவினர் உரைநிகழ்த்துவர். திருகோணமலையில் நடைபெறும் கூட்டத்தில் இலங்கைத் தொழிற்சங்கச் சம்மேளன தலைமைக் குழுவினர் உரைநிகழ்த்துவர்.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் கூட்டத்தில் இலங்கை வாலிபர் சங்கச் சம்மேளன தலைமைக் குழுவினர் உரை நிகழ்த்துவர். கூட்டங்களையொட்டி நடாத்தப்படவிருக்கும் ஊர்வலங்களில் நாடெங்கிலுமுள்ள கம்யூனிஸ்ட் ஆதரவாளர்கள் அணிஅணியாக வந்து கலந்துகொள்வரெனத் தெரிகிறது.

---

## தீர்வையற்ற வர்த்தக நிலையம்-

# இந்தியர்கள் ‘படையெடுப்பு’!

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து பலர் கொழும்பிலுள்ள தீர்வையற்ற வர்த்தக நிலையத்தில் பொருட்களை வாங்குவதற்காக தினமும் வந்துகொண்டிருக்கின்றனர்.

விமான மார்க்கமாக இங்கு வரும் இவர்கள் நாடு திரும்பும்போது கப்பல் மார்க்கமாகவே செல்கின்றனராம்.

இந்தியா செல்ல தினமும் 150 பேருக்கே கோட்டை ரயில் நிலையத்தில் பயணச் சீட்டுக்கள் வழங்கப்படுவதால்

இங்கு வரும் இந்தியப் பயணிகளில் சிலர் டிக்கட் கிடைக்காது கோட்டை ரயில் நிலைய நடைபாதைகளிலும் மற்றும் செட்டியார்தெரு வீதிகளிலும் நாட்களைக் கடத்துகின்றனர்.

திட்டமிட்டபடி நாடு திரும்ப முடியாத பட்சத்தில் செலவுக்குப் பணமின்றி, இங்கு வாங்கிய பொருட்களையே சிலர் விற்றுவிட்டு தமது அத்தியாவசியத் தேவைகளைக் கவனிக்கின்றனராம். (கி)

---

## மருதடி தேர்த்திருவிழா

[யாழ்ப்பாணம்]

மானிப்பாய் அருள்மிகு ஸ்ரீ மருதடி விநாயகர் தேவஸ்தான மஹோற்சவம் கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

இம்மாதம் 13ம் திகதி சப்பறத்திருவிழாவும், 14ம் திகதி பகல் தேர்த் திருவிழாவும், 15ம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

---

## கருத்தரங்கு

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை வட்டாரக் கிராம நூல் நிலையங்களுக்கான கருத்தரங்கும் அறிக்கைகள், பதிவேடுகள் ஆகியவற்றின் பரிசீலனைகளும் வலி—மேற்கு உதவி அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

---

## கரவெட்டி, பருத்தித்துறை

# பிரதேசசபை தலைவர் தெரிவு பிரசாரம் உச்சக்கட்டம்!

[புலோலி]

பருத்தித்துறை, கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் பிரதேச சபைத் தலைவர்களைத் தெரிவு செய்வதற்கான பிரசாரங்கள்உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது.

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச சபைத் தலைவர் பதவியைக் கைப்பறறுவதற்கு கரவெட்டி வடக்கு கிராமோதய சபைத் தலைவர் திரு. என். பாஸ்கரன், உடுப்பிட்டி கிராமோதய சபைத் தலைவர் திரு. இ. வேலுப்பிள்ளை ஆகியோருக்கிடையே பலத்த போட்டி ஆரம்பித்துள்ளன.

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச சபைத் தலைவர் பதவிக்கு இரண்டொருவரின் பெயர்கள் பிரஸ்தாபிக்கப்பட்டுவருகின்றது.

---

## வீதி திருத்த நிதி ஒதுக்கீடு

[மண்டைதீவு]

மண்டைதீவு லூப் வீதி சீர்திருத்தும் வேலைகளுக்குப் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் பதின் ஒன்பதாயிரம் ரூபா பணம் ஒதுக்கப்பட்டதாக தீவுப்பகுதி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் தெரிவித்தார்.

---

## பால்மா விநியோகம்

[வட்டுக்கோட்டை]

சீ—நோர் காரைநகர் சமூக அபிவிருத்திப்பிரிவு தோப்புக்காடு மடத்துவளவு, ஊரி, மாதடை, தட்டுவங்கொட்டி, அராலி ஆகிய கிராமங்களுக்கு சிறுவர் பாடசாலைப் போஷாக்குத் திட்டத்தின் கீழ் பால்மா விநியோகம் செய்துள்ளது.

---

## கி. மு. சங்க ஒன்றியம்

[வட்டுக்கோட்டை]

சாரைநகரில் உள்ள கி. மு. சங்கங்களுக்கான ஒன்றியம் அமைப்பதற்குசீநோர் —சமூக சேவைப் பணிப்பாளர், காரைநகர் மேற்கு கிராம சேவை அலுவலரும் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், இதற்கான ஆரம்ப அங்குரார்ப்பணக் கூட்டத்தை இம்மாத நிறைவில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் தலைமையில் கூட்டுவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

---

**தங்க நகைகளுக்கும்**
**தங்க கட்டிகளுக்குமான**
**பணவசதி**

**த பிறின்ஸ் கம்பனி**
வழங்கும் மற்றுமொரு புதிய திட்டமாக
**தங்க நகைகளுக்கும்,**
**தங்க கட்டிகளுக்குமான**
**பணவசதி**
வழங்க முன்வந்துள்ளது. உங்களுக்கு பண நெருக்கடி ஏற்படும்போது, எம்முடன் கலந்தாலோசித்து, தவணை முறையிலோ, குறிப்பிட்ட கால எல்லையிலோ, பணத்தைச் செலுத்தி உங்கள் தங்க நகைகளையோ அல்லது பவுண் கட்டிகளையோ பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:
விற்பனை முகாமையாளர்,

**த பிறின்ஸ் கம்பனி லிமிட்.**

249, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7680

**ஹரன்** யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த், மாதவி
தேங்காய் சீனிவாவன்
சௌகார் ஜானகி
நாகேஷ்
**தில்லுமுல்லு**

## கிளிநொச்சியில் நவீன கலாசார மண்டபம்

(பரந்தன்)
கிளிநொச்சியில் நவீன வசதிகள் கொண்ட கலாச்சார மண்டபம் ஒன்றை சுமார் பத்து லட்சம் செலவில் கட்டிமுடிக்க கிளிநொச்சி தெங்குபனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் தீர்மானித்துள்ளது. ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள கிளிநொச்சி புதிய நகரமண்டபம் போதிய வசதிகள் இன்மையுடன் இருப்பதால் சங்கத்தின் இந்நடவடிக்கை இப்பகுதி கலைஞர்களுக்கும் பொது மக்களுக்கும் ஓர் வரப்பிரசாதமாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**யாழ்.றீகல்**
தினசரி10—30, 2—15, 4—30 7—00, 9—30
**MAD MAX**
from 14th—18th
**Live and Let Die**

**ஸ்ரீதர்** (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஸ்ரீபிரியா நடித்த
**பொல்லாதவன்**
(ஈஸ்ட்மன் கலர்)

**ராஜா** (யாழ்ப்பாணம்) தினசரி 10.30, 2.30, 6.00 and 9.30
சிவாஜி, சாவித்திரி, சந்திரபாபு
**காத்தவராயன்**

**ராணி** (யாழ்.நகர்) தினசரி 10.30, 2.30, 6.15 9.30
கமலஹாசன் - ரதி நடித்த
**உல்லாசப் பறவைகள்**
(ஈஸ்ட்மன் கலர்)
அனேக ரசிகப் பெருமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க புத்தாண்டு வரைக்கும் பறந்துகொண்டிருப்பேன்.

**மனோகரா** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் - கே. ஆர். விஜயா - நாகேஷ்
**நல்ல நேரம்**
[புதிய பிரதி]

**சாந்தி** (யாழ்நகர்) 10—30, 2—30, 6—15, 9—45
— K. பாலச்சந்தரின் —
ஜெமினி ஜெயசுதா
**நான் அவனில்லை**
— புதிய பிரதி —

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 5 காட்சிகள்
**Flying High**

**லிடோ** (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
**கற்பகம்**

3-வது ஜனத்திரள் வாரம்
**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஒரு சினிமா நடிகைக்கு ஏற்படும் இன்னல்களையும் சோதனைகளையும் இயல்பாகவும் மனதைத்தொடும் வகையிலும் இயக்கியிருக்கும் விதம் இத்திரைப்படத்தின் வெற்றிக்குப் பெரிதும் உதவியுள்ளது.
—Movieland 1980 December
தெலுங்கில் 500 நாட்களுக்குமேல் ஓடிய 'சிவரஞ்சனி'படத்தின் மறுதயாரிப்புத்தான்
கமலஹாசன்—ரஜனிகாந்த்—சிவாஜி கணேசன்—ஸ்ரீபிரியா—சுபாஷினி—ஹரிபிரசாத்—மோகன்பாபு நாகேஷ் மற்றும் பலர் நடித்த
★ **நட்சத்திரம்** ★
(ஈஸ்மன்ட் கலர்)

"பிரச்னைகளை தீர்ப்பதில்

# ஆசிரியர், அதிபர், மாணவர்கள் மத்தியில் நல்லுறவுவேண்டும்

## கிளிநொச்சி எம். பி. கூறுகிறார்

(பச்சிலைப்பள்ளி)
'அதிபரும், ஆசிரியர்களும் மாணவர்களும் ஒரு குடும்பத்தின் அங்கத்தவர்கள். அவர்களில் அதிபர்கள் குடும்பத்தின் மூத்த சகோதரர்களைப் போன்றவர்கள்.'

இவ்வாறு கிளிநொச்சி எம். பி. திரு. வீ. ஆனந்தசங்கரி பரந்தன் வட்டாரப்பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற மெய்வல்லுனர் போட்டியில் பிரதமஅதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

அவ்வைபவத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதாவது: 'பாடசாலைகளில் எழுகின்ற பிரச்னைகளை அதிகாரிகள் மட்டத்திலோ, அல்லது பெற்றோர்கள் மட்டத்திலே செல்லவிடாமல் அவற்றினைத் தீர்த்துவைக்க வேண்டும். இதற்கு அதிபர்—ஆசிரியர்கள் மாணவர்கள் மட்டத்திலே பரஸ்பரம் நல்லுறவு நிலவ வேண்டும்.'

'பளை, மகாவித்தியாலயம் பல சாதனைகளைப் புரிந்து வளர்ச்சியடைந்து வருகிறது. இப்போட்டியில் முதலாமிடத்தை அது பெற்றுள்ளது. கடந்த வருடம் நடைபெற்ற க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் இங்கிருந்து தோற்றிய மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லக்கூடிய தகுதியைப் பெற்றுள்ளார்கள்' என்றார்.

(வெ)

நாடக விமர்சனம்:

## இலங்கை வேந்தன்

புதிய உத்திகளைக் கையாண்டு அந்நிய தேசத்தவரின் பாணிகளையும் கலந்து இன்று பல நாடகங்கள் அரங்கேறிவரும் கட்டத்தில் பழைய பாணிகளில் பாமரரும், மகிழத்தக்க நாடகங்களைப் பார்க்கவேண்டும்போல் ஆசை தோன்றுவது இயற்கையே. ஆனாலும் பல கோணங்களிலும் தீவட்டிகள் பிரகாசிக்க 'காஸ் லைட்'டில் விடிய விடிய நித்திரை விழித்திருந்து பார்த்த நாடகங்களின் விறுவிறுப்பு ஏனோ இன்றையநாடகங்களில் இருப்பதில்லை. தனிப்பட்டவர்களையோ, சமூகத்தில் ஒரு சிலரையோ, அல்லது ஒரு சமூகத்தையோ கிண்டல் செய்து பல நாடகங்கள் இடம் பெறுகின்றன. இந்த நிலைமையில் எவரையும் புண்படுத்தாமல், எவ்வித சமூக, அரசியல் கலப்புக்களும் இல்லாமல் பார்த்தவர்கள் திருப்தியடையக்கூடிய முறையில் நீராவியடி கிருஷ்ணன் கலைமன்றத்தின் இலங்கைவேந்தன் இசை, நடன, நாடகம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேறியது பாராட்டுக்குரியது.

சிவன் சக்தி நடனத்துடன் ஆரம்பமான நாடகம், இலங்கை வேந்தனின் தோல்வியைச் சித்தரிப்பதுடன் முடிவடைவது வேதனைக்குரியது. சிவன் சக்தி நடனம் மனதிற்குக் கிளுகிளுப்பை ஏற்படுத்தினாலும் ஏதோ முதலாவது காட்சி அவசரக்கோலத்தில் உருவாக்கப்பட்டிருப்பதுபோல் அமைந்திருந்தது. இலங்கை வேந்தனின் பெயரில் உருவாகியிருந்த இந்நாடகத்தில் இலங்கை வேந்தனின் எழுச்சி குறித்து ஆங்காங்கே அகம்பன், மாரீசன், கும்பகர்ணன், இந்திரசித் போன்ற பாத்திரங்களின் வாயிலாகவே செய்யப்பட்டதே அன்றி நாடக பாணியில் வெளிப்படுத்தப்படாமல் சிதைக்கப்பட்டதன் காரணத்திற்கு யார் பொறுப்பாளிகளோ தெரியவில்லை. மற்றும் இலங்கைவேந்தன் சரித்திரத்தைக் காட்டவெளிக்கிட்டவர்கள் அவன் மனைவி மண்டோதரியைக் காட்டாததன் மர்மம் என்ன?

நாடகங்களில் பெண்கள் பங்கேற்கக்கூடிய முதிர்ச்சி நாடக உலகில் அருமையாகவே இருக்கிறது. அதுதான் மண்டோதரியின் வருகையின்மைக்குக் காரணமோ தெரியவில்லை. ஆனாலும் சீதையாகத் தோன்றிய செல்வராணியும், சூர்ப்பநகையாகத் தோன்றிய பவானியும் தங்கள் பாத்திரத்தை நன்றாக நடித்திருக்கிறார்கள்.

அனுமானாகத் தோன்றி சுந்தா அசோக வனத்துள் பிரவேசித்தநேரத்திலிருந்து அரசவைக்காட்சிவரை விறுவிறுப்பாகநாடகம்அமைந்திருந்தது. ஏனைய பாத்திரங்களின் குரல்கள் மேடைக்குள்ளேயே அடங்கிவிட்டதைக் குறிப்பிடாமல் இருக்கமுடியாது. மாரீசன் வேடம் பொருத்தமாக இல்லை. காலவரையறை செய்யமுடியாத இதிகாச காலத்தைச் சித்தரிக்கும் நாடகத்தில் மாரீசன் மேலங்கி அணிந்து நவீனமாகத் தோன்றியது வேடிக்கையே!

அநேகமாக புதுமுகங்கள் அவரவர் இடத்திற்கு நடத்தி இருந்தது வெளிப்படையாகத் தெரிகிறது. இது இயக்குனரின் கவனிப்பின்மையேயன்றி வேறெதுவாகவும்இருக்கமுடியாது

'இலங்கை வேந்தன்' இசை, நடனம், நாடக பாணியில் வசனம் அமைந்தது சிறப்பாகவிருந்தது.

அநுபவரீதியான பக்கவாத்தியமேயன்றி இந்நாடகத்திற்காகப் பழக்கப்பட்ட பின்னணி வாத்தியங்களாக அமையவில்லை என்பதும் காட்சிக்குக் காட்சி தெட்டெனத் தெளிவாகியிருந்தது. இலங்கை வேந்தன் நாடகத்தில் உயிர்த்துடிப்பான பாத்திரமாக அமைந்தது "இலங்கை வேந்தனே" நல்ல எதிர்காலம் உண்டு.

- 'தர்மா'
(யாழ். பல்கலைக்கழக மாணவன்)

**வெஸ்லி** [illegible]
11.4.82 வரை
தினசரி 2.30, 6.15, 9.15
துளசிராம், மஞ்சுபார்கவி
**சங்கராபரணம்**

மல்லாகம் கி. மு. ச. கழகம்

## சகல போட்டிகளிலும் முதலிடம்; எம். பி. பாராட்டு

(யாழப்பாணம்)
மல்லாகம் கிராம முன்னேற்றச் சங்க விளையாட்டுக் கழகம் முதன்முறையாக சகல விளையாட்டுப் போட்டிகளிலும் முதலிடத்தைப் பெற்றதை மேற்படிவிளையாட்டுப்போட்டிகளில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு பாராட்டினார்.

யாழ். மாவட்டத்தில் சகல உதவி அரசாங்க அதிபர்பிரிவுகளிலும் நடாத்தப்படும் விளையாட்டுப்போட்டிகளிலும் வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலேயே ஒவ்வொரு வருடமும் முதல் முதலில் நடாத்தப்படுவதாகவும் வலிகாமம் வடக்கு, விளையாட்டுத்துறையில் யாழ். மாவட்டத்தில் முதலிடம் வகிப்பதற்கு அப்பகுதி விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் திரு. அ. முருகையா காரணகர்த்தா என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்வாண்டு நடைபெற்ற ஆண்கள்கரபந்தாட்டப்போட்டியில் சாங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தையும், உதய சூரியன் விளையாட்டுக்கழகம் இரண்டாம் இடத்தையும், பெற்றன. பெண்கள் கரபந்தாட்டப்போட்டியில் மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தையும், தெல்லிப்பளை அருணா விளையாட்டுக்கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றன.

பெண்கள் வலைபந்தாட்டப் போட்டியில் முதலாம் இடத்தை தெல்லிப்பளை அருணா விளையாட்டுக்கழகமும், இரண்டாம் இடத்தைக் கட்டுவன் ஞானோதையா விளையாட்டுக்கழகமும் பெற்றுக்கொண்டன.

'எல்லே' விளையாட்டுப்போட்டியில் மல்லாகம் கி. அ. ச. விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தையும், காங்கேசன் துறை யங்ஸ்ரேயல் விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. உதைபந்தாட்டப் போட்டியில் முதலாம் இடத்தை தெல்லிப்பளை திருமகள் விளையாட்டுக்கழகமும், இரண்டாம் இடத்தை மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக்கழகமும் பெற்றுக்கொண்டன. ஆண்கள் சுவட்டு மெய்வல்லுநர் போட்டிகளில் மல்லாகம் கி. அ. ச. விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தையும், காங்கேசன்துறை யங்ஸ்ரேயல் விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தையும், பெண்கள் சுவட்டு மெய்வல்லுநர் போட்டிகளில் கட்டுவன் ஞானோதயா விளையாட்டுக்கழகம் முதலாம் இடத்தையும், மல்லாகம் கி. அ. ச. விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. சகல விளையாட்டுப் போட்டிகளிலும் சிறந்த விளையாட்டு வீரனாக திரு. ந, சாந்தகுமார் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். சுவட்டு மெய்வல்லுநர் போட்டிகளில் சிறந்த வீரராக திரு ஆர், தனராஜாவும், சிறந்த வீராங்கனையாக செல்வி கதிர்காமநாதன் தனலட்சுமியும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## கடலுக்குப் பலி!

(மாவிட்டபுரம்)
கீரிமலை கடலில் நீராடச்சென்ற 32 வயதான இளைஞர் நேற்று கடலுக்குப் பலியானார். பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (க)

# வரி விளம்பரம்

## தேவை

மோட்டார் சைக்கிள்கள் திருத்துவதில் நன்கு அனுபவம் வாய்ந்த மெக்கானிக் உடன் தேவை. அனுபவத்தையும், எதிர்பார்க்கும் ஊதியத்தை குறித்தும் நற்சான்றிதழ் பத்திரங்களுடன் உடன் விண்ணப்பிக்கவும். 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2812

சோடாப்பெட்டி ஏற்றி இறக்கி வேலைசெய்யக்கூடிய கூலியாட்களும், வான் (VAN) விநியோகம் செய்யக்கூடியவர்களும் தேவை. நேரில்வரவும் உரிமையாளர், பிள்ளையார் ஸ்ரோஸ். 2826

## விற்பனைக்கு

தெல்லிப்பளைபண்டத்தரிப்பு வீதியில் ''கூத்தஞ் சிமா'' சந்தைக்கு எதிரேயுள்ள 7 பரப்பு வீடுகட்டக்கூடிய காணி மின்சார வசதியுடன் 100 பனைக்குமேல் உண்டு. இரு துண்டுகளாகப் பிரிக்கலாம், கீரிமலை—சண்டிலிப்பாய் வீதி. விளான் சந்திக்கு அருகாமையில் ''ஆத்திஓலை'' 7½ பரப்பு வீடுகட்டக்கூடிய தோட்டக் காணி, பரந்தன்—முல்லைத்தீவு வீதியில் 66 அடிப் பாதையிலுள்ள ''புளியம்பொக்கனை'' (மத்திய வகுப்புத் திட்டம்) 10 ஏக்கர் திருத்திய காணி ஆகியன விற்பனைக்குண்டு அளவையாளர் படங்கள் உண்டு. விபரங்களுக்கு: விண்ணப்பிக்க விளம்பர இல 2754 மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 2754

மானிப்பாய் பட்டினசபை, இலங்கை வங்கி, பெற்ரேல் செட், மகளிர் கல்லூரிக்கு அண்மையில் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு முன்பாக பத்துப்பரப்பு காணி விற்பனவுக்கு உண்டு. விபரங்களுக்கு: V.S. கந்தையா, தேநீர்கடை, மானிப்பாய். 2 94

புதுவருட தினத்தன்று மருதடி விநாயகர் ஆலய முன்றலில் அமைந்திருக்கும் எமது விளம்பர நிலையத்தில் எமது தயாரிப்புக்களான அண்ணா கோப்பி, அண்ணா பற்பொடி, அண்ணா தேயிலை, அண்ணா பத்தி மற்றும் ஜெயந்திபத்தி, புளும் பவுடர், சோயாற்றின் ஆகியவற்றை வாங்குவதோடு இனும் பொருட்களையும் பெற்றுக் கொள்ளுங்கள். அண்ணா இன்டஸ்றீஸ், இணுவில். 2813

## ஏல விற்பனவு

காரைநகர் மாப்பாணவூரி தி. க. பெரியதம்பி அவர்களிடம் 1.10.79 தொடக்கம் 31 3.81வரை அடைவுவைத்து மீட்கப்படாத நகைகள் 29.4. 1982 காலை 9 மணி தொடக்கம் மேற்படி அடைவு கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏல விற்பனையாளர்.
643, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். 2797

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை, வண்ணார்பண்ணை தென்கிழக்கிலிருக்கும் அணிஞ்சிலடி நி. பர. 3/4 அதிலுள்ள கட்டிடமும் (பெரியகடை மலாயன் கபே ஹோட்டலின் பின் கட்டிடம்) இவ்வாதனத்தை வாங்க விரும்புவோர் ஆ. ந. இராமச்சந்திரன் சட்டத்தரணி, பருத்தித்துறை, என்னும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். 2835

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் மின்சார வசதியுடன் கூடிய இடத்தில் வீடு கட்டக்கூடிய காணி ஐந்து பரப்பு விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய விலாசம்: பெ. கந்தையா, கிராம்புவில், சாவகச்சேரி. 2832

14—4—82ல் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தேர்த் திருவிழாவில் மில்க்வைற் தயாரிப்புக்கள் யாவும் சகாய விற்பனையுடன் அன்பளிப்புகளும் வழங்கப்படும். மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் எமது விளம்பர வாகனத்திற் கொடுத்து பெறுமதிவாய்ந்த பரிசுகளைப் பெற்றுக் கொள்ளலாம். மில்க்வைற், யாழ்ப்பாணம். 2700

தட்டச்சு இயந்திரம் - அண்டர்வூட் (Underwood) மேசை மொடல் மிகநல்ல நிலையில் லீ கௌள் (Lee Howl) மின்சாரத்தினுல் இயங்கும் தண்ணீர்ப் பம்பு ½ குதிரைச் சக்தி. குழாய்கள் 2 அங் : 2 அங் புதிய நிலையில். 178, நாவலா வீதி, யாழ்ப்பாணம். (பிறவுண் வீதி சந்திக்கு அண்மையில்) 2833

### சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் விளம்பரம்

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மின்தறி ஆலை மூன்றும் பகுதிக்கு துண்டு அடிப்படையில் கடமைபுரிவதற்கு நெசவாளருக்கான வெற்றிடங்கள் உண்டு. விரும்புவோர் விண்ணப்பத்துடன் 20.4.82ம் திகதிக்கு முன்னதாகக் காரியாலய நேரத்தில் சமுகம் தரவும்.

பொதுமுகாமையாளர்

சங்கானை,
10.4.82. 2834


சிசில் குளிர் சாதனப் பெட்டிகள்
SISIL R:F.IG RATORS

★ 6,8 கன அடிப்பெட்டிகள் (சாதாரணம் & டிலுக்ஸ் மொடல்கள்) மிக சொற்ப தொகையே கையிருப்பில் உள்ளதால் உங்கள் தேவைக்கு உடனே முந்துங்கள்.

★ ஒரு வருட உத்தரவாதம் உள்ளது. எல்லா உப உறுப்புகளும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

★ சகல விதமான பிழைகளை திருத்துவதும், பெயின்ற் அடித்தும் தாமதமில்லாமல் செய்து கொடுக்கப்படும்.

சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிற்.
484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 234


# எண்ணெய் வள ஆராய்ச்சி: இலங்கை நிதி கோருகிறது

(கொழும்பு)

இலங்கையின் கடல் ஓரமாக எண்ணெய் வளங்களை ஆராயும் பொருட்டு நிதி உதவி வழங்குமாறு இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபை அபிவிருத்தி திட்டத்தினைக் கேட்டுள்ளது.

ஏற்கனவே பல சர்வதேச எண்ணெய்க் கம்பெனிகள் இலங்கையிலே இத்தகைய ஆய்வுகளை மேற்கொண்டபோதிலும் வெற்றி பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## லயன்ஸ்கழக வருடாந்த மாநாடு

(பண்டத்தரிப்பு)

அகில இலங்கையிலுமுள்ள லயன்ஸ்கழகங்களின் வருடாந்தமகாநாடு இம்மாதம் 17ம், 18ம் திகதிகளில் நீர்கொழும்பில் நடைபெறவுள்ளது. இலங்கை மாவட்ட ஆளுநர் திரு. சுனில்வட்டவெல தலைமையில் இம்மாநாடு நடைபெறும்.

## ரூ. 27,000 நிகர லாபம்

[பண்டத்தரிப்பு]

வட்டுக்கோட்டைத்தொகுதி தெங்குப் பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் கடந்த 1981ம் ஆண்டில் 27 ஆயிரம் ரூபாவை நிகர லாபமாக பெற்றுள்ளது.

இத்தகவலை இச்சங்கத் தலைவரும், யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினருமான திரு. சு. நடேசு தெரிவித்தார்.

## பொருளாதார அபிவிருத்தி: தன்னிறைவு வேண்டும்''

(சாவகச்சேரி)

''இந்த சர்வலோக தூரதரிசன நிறுவனம், ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி பொருளாதார அபிவிருத்தியில் தன்னிறைவுகாண வழி செய்வதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது. உங்கள், உங்கள் பகுதியில் தும்புக் கைத்தொழிற் திட்டம், ஆடு வளர்ப்புத் திட்டம் என்பன அறிமுகப் படுத்தப் பட்டுள்ளன. இதுவரை 18,000 ரூபா ஒதுக்கித் தந்துள்ளோம்.''

கச்சாய் கிராம அபிவிருத்தி சபைத் தலைவர் சீ. வி. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற்ற தூரதரிசன நிறுவனத்தின் அபிவிருத்தித் திட்டத்தில் உரையாற்றுகையில் யாழ். மாவட்ட திட்ட அதிகாரி திரு பிறடிக் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

''அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள். யாழ். மாவட்டக் கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. எம். எவ். அருள்நாயகம் மாவட்ட மேற்பார்வையாளர் திரு. வீ. கே. சுப்பிரமணியம், கிராம அபிவிருத்தி உதவி அதிகாரி என். ஆர். பரராசசேகரம் உட்பட பலர் கலந்துகொண்ட மேற்படி வைபவத்தில் திரு. பிறடிக் தொடர்ந்து பேசியதாவது:

''அமெரிக்க நிறுவனமான இந்த நிறுவனம் அங்குள்ள செல்வந்தர்களின் முயற்சியால் சேகரிக்கப்பட்ட பணத்தை ஏழை மக்களுக்கு வழங்க வகை செய்யப்பட்டிருக்கிறது. இவ்விதமாகக் கிடைக்கும் பணத்தை சரியான முறையில் உபயோகிக்க வேண்டும். நீங்கள் இங்கு கூட்டு முயற்சி மூலம் செயற்பட்டு திட்டங்கள் நடத்துகிறீர்கள். அதைநாம் விரும்பவில்லை. தனிப்பட்ட முறையில் அங்கத்தவர்களுக்கு பணத்தைக் கொடுத்து அவர்கள் மூலம் திட்டங்களை நடைமுறைப் படுத்தவேண்டும்.

''கூட்டுமுறைத் தும்பு அபிவிருத்தித் திட்டங்கள் நல்ல முறையில் இயங்காமையை தென்னிலங்கைக்குச் சென்று பார்த்தால் தெரியும். உங்கள் திட்டத்தை திறம்பட நடாத்தி மேலும் நிதியைப் பெற்று உங்கள் கிராமத்தை வளம் படுத்த வேண்டுமென்பதே எமது விருப்பமாகும்.'' என்ருர்.

யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி அதிகாரி எம். அருள்நாயகம் பேசுகையில் கூறியதாவது: ''உங்கள் பகுதி இளைஞர், யுவதிகள் நல்லமுயையில் பயிற்சி பெற்றவர்போல் தெரிகிறது. உங்கள் பகுதியில் வேறுபல அபிவிருத்தித் திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளள. ஆடு, மாடு வளர்ப்புத் திட்டம், வீட்டுத் தோட்டம், இளைஞர் சேவைத் திட்டம் என்பன போன்ற திட்டங்களை நல்ல முறையில் நடத்த வேண்டும்.

''உங்கள் பகுதி மக்கள் எதை விரும்புகிருர்களோ அதைக் கூடியவரை நிறைவேற்றவேண்டும்'' என்ருர்.

## வானெலிப்பெட்டியை திருடி தப்பிஓட முயன்றவர் பிடிபட்டார்

(பண்டத்தரிப்பு)

பட்டப்பகல் நேரத்தில் ஆசிரியர் ஒருவரின் வீட்டில்புகுந்து அங்கிருந்த கசெட் வானெலிப் பெட்டியைத் திருடிக்கொண்டு தம்பி ஓடமுயன்ற திருடன் ஒருவன் வீட்டுக்காரரினுல் கையும் மெய்யுமாகக் கண்டு பிடிக்கப்பட்டு காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட சம்பவம் பண்டத்தரிப்பில் நடைபெற்றது. பண்டத்தரிப்பு கிராம சேவை அலுவலர் திரு. சுந்தரமூர்த்தி மூலம் காங்கேசன்துறைப் பொலிசில் ஒப்படைக்கப்பட்ட இந்த 22 வயது மதிக்கத்தக்க இளைஞனுக்கு இப்பகுதியில் நடைபெற்ற பல திருட்டுச் சம்பவங்களில் தொடர்பு இருக்கலாம் என்று சந்தேகிக்கும் பொலிசார் அந்த இளைஞனைப் பாதுகாப்பில் வைத்து விசாரணைசெய்து வருகின்றனர்.

### தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்
(வரைவுள்ளது)

## பதவி வெற்றிடம்

### மின்தறி நிலையப் பொறுப்பதிகாரி
### பதவி 1

எமது சங்க மின்தறி நிலையத்தில் பொறுப்பதிகாரி பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வித்தராதரம்

1. க. பொ. த. சாதாரணத்தில் கணிதம்/எண் கணிதம்/இரசாயனவியல் உட்பட ஆறு பாடங்களில் பெற்றுள்ள சாதாரண சித்தியும்.
2. இவ்வாருன ஸ்தாபனமொன்றில் நிர்வாகத்தரத்தில் பெற்றுள்ள இரண்டு வருட அனுபவமும்.
3. வாப்பிங், வைன்டிங், சைசிங் ஆகியவற்றில் பெற்றுள்ள அனுபவமும் உற்பத்திக் கணக்குத் தயாரித்தல், உற்பத்தி மதிப்பீடு தயாரித்தல் ஆகியவற்றுள் பெற்றுள்ள அனுபவமும்.

வயதெல்லை: 23—40 வரை.

சம்பளம்: 350—545 ..........................
12.50×10, 17.50×4

விண்ணப்ப முடிவு திகதி: 24—04—82.

அனுப்பவேண்டிய விலாசம்:

பொதுமுகாமையாளர், தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம், தெல்லிப்பளை.

பொதுமுகாமையாளர்
தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்,
தெல்லிப்பளை.

82—04—06. 2823

## மரம் நாட்டு வைபவம்

[பண்டத்தரிப்பு]

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் மல்லாகம் மாவட்ட நீதிமன்ற வளவில் மரம்நாட்டு வைபவம் ஒன்றை விரைவில் நடாத்துவது என்று தீர்மானித்துள்ளது.

## சாம்பியனுகத் தெரிவு

[பச்சிலைப்பள்ளி]

பரந்தன் வட்டாரப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற, மெய்வல்லுநர் போட்டியில் பளை மகாவித்தியாலயம், கூடுதலான புள்ளிகளைப் பெற்று சாம்பியனுகியது.

இப்போட்டி பரந்தன் இந்துக்கல்லூரியில் நடைபெற்றது. இரண்டாவது இடத்தை பரந்தன் இந்துக் கல்லூரியும், மூன்ருவது இடத்தை முரசுமோட்டை முருகானந்தா வித்தியாலயமும் பெற்றது.

## கலைவிழா

மண்டைதீவு)

திருநெல்வேலி அம்பாள் சனசமூக நிலையத்தினரின் ஆதரவில் நடைபெறும் புதுவருடக் கலைவிழா நிலைய முன்றலில் புதுவருட தினத்தன்று யாழ். மாவட்ட அமைச்சரின் இணைப்புச் செயலாளர் திரு. எஸ். பி. பாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் திருமதி கார்த்திகா கணேசனின் மாணவிகள் நடனமும் ஏ எஸ் கருணாநிதியின் 'உன்னுல் அது முடியாது', எம். எஸ். தியாகலிங்கத்தின் 'மலர்ந்தும் மலராத' ஆகிய நாடகங்களும் இடம்பெறும்.

# கிராமோதய சபைத் தலைவர் தெரிவு

## பிரதமருக்குப் புகார்

[புலோலி]

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள நாகர் கோவில் கிராமோதய சபைத்தலைவர் தெரிவு கடந்த மாதம் 7—ம் திகதி தெரிவு செய்யப்பட்ட போதும் மீண்டும் 14—ம் திகதி வேறொரு தலைவர் தெரிவு செய்யப்பட்டுள்ளாரெனவும் இந் நடவடிக்கை முறையற்றதென்றும் உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவுக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 7 ம் திகதி இக்கிராமோதய சபைத்தலைவர் தெரிவு இடம் பெற்றதாகவும் அப்போது மூன்று சங்கங்களை சேர்த்துக் கொள்ளுமாறு உதவி அரசாங்க அதிபரினால் அனுப்பப்பட்ட கடிதம் ஏற்றுக் கொள்ளப்படாமல் 14 சங்கங்களின் தலைவர்களுக்கிடையில் தலைவர் தெரிவு செய்யப்பட்டபோது நா. சந்திரசேகரம் என்பவரும் கா. நாகமுத்து என்பவரும் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டு சந்திரசேகரம் 8 வாக்குகளும் நாகமுத்து 6 வாக்குகளும் பெறறு இரண்டு அதிகப்படியான வாக்குகளால் சந்திரசேகரம் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். பின்னர் விசேடசேவைஉத்தியோகத்தர் திரு. யோகேந்திரநாதன் உதவி அரசாங்க அதிபரின் உத்தரவின் பேரில் முன்பு தெரிவு செய்யப்பட்ட தலைவர்தெரிவு ரத்துச் செய்யப்பட்டதாகவும் மீண்டும் கடந்த மாதம் 14 ம் திகதி இக்கிராமோதைய சபைத்தலைவர் தெரிவு நடைபெறுமெனவும் அறிவித்திருந்தார்.

அதன்படி கடந்த மாதம் 14 ம் திகதி தலைவர் தெரிவுக்கான கூட்டம் விசேடசேவை உத்தியோகத்தர் திரு. யோகேந்திரநாதன் தலைமையில் ஆரம்பமானது. அப்போது முன்னர் ஏற்றுக்கொள்ளப்படாத கௌந்தந்துறைப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபைத்தலைவர் திரு. சிவகுருநாதன் மாணிக்கப்பிள்ளையார் கோவில் ஆலய பரிபாலன சபைத்தலைவர் திரு. எஸ். முருகுப்பிள்ளை, குடாரப்பு கிராமியமீளமைப்பு நிறுவனத் தலைவர் திரு. பீ. அந்தோனிமுத்து ஆகியோர் இச்சபைத் தேர்தலில் வாக்களிக்கத்தகுதியுள்ளவர்கள் என்று அறிவிக்கப்பட்டது. ஆனல் முன்னர் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட சந்திரசேகரம் கிராமோதைய சபை உறுப்பினர்களான வ. பத்மநாதன் ரா. இரத்தினசிங்கம், செ. சுந்தரலிங்கம் ஆகியோர் கூட்டத்திற்குச் சமூகமளித்திருக்கவில்லை.

கூட்டம் ஆரம்பமானதும் கூட்டத்திலிருந்த குடாரப்பு கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் திரு. சி. குலசிங்கம் பாவனையாளர் சங்கத்தலைவர் திரு. கே சிவப்பிரகாசம் ஆகியோர் இத்தலைவர் தெரிவு முறையற்றதெனக்கோரி வெளிநடப்புச் செய்தனர். எனினும் கூட்டம் நடைபெற்றது. தலைவராக திரு. கே. நாகமுத்து தெரிவு செய்யப்பட்டார். இக்கூட்டத்திற்கு தங்களுக்குக் கடிதம் அனுப்பப்படவில்லை என்று முன்பு தெரிவு செய்யப்பட்ட தலைவர் திரு. சந்திரசேகரம் திரு. பத்மநாதன் திரு. சுந்தரலிங்கம், திரு. இரத்தினசிங்கம் தெரிவித்துள்ளதுடன், இது பற்றி உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று பிரதமர் திரு. ஆர். பிரேமதாஸவைக்கோரியதுடன், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் எதிர்கட்சிமுதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் யாழ். அரச அதிபர் திரு. தேவநேசன் நேசையா பருத்தித்துறை எம்.பி. திரு. கே. துரைரத்தினம் உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும் மயிலும் ஆகியோரையும் கோரியுள்ளார்.

### பிரிட்டிஷ்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

ஆர்ஜன்டைனவில் பேச்சுவார்த்தை நடத்திய அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. அலெக்சாண்ட ஹெய்க் லண்டன் புறப்பட்டார். ஆர்ஜென்டீனு பேச்சுவார்த்தை பயனளிக்கவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

போக்லண்ட் பிரச்னையை சமாதானமாக தீர்த்து வைக்குமாறும் இரத்தக்களரியை ஏற்படுத்த வேண்டாமென்றும் பரிசுத்த பாப்பரசர் வெளியிட்ட ஈஸ்டர் செய்தியில் தெரிவித்துள்ளார் இச்செய்தி 4 கண்டங்களைச் சேர்ந்த 27 நாடுகளுக்கு ஒலிபரப்பப்பட்டது. [க]

மா கொள்வனவு - விற்பனை

## பொதுச்சபை உறுப்பினர் புகார் மீது விசாரணை

[யாழ்ப்பாணம்]

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் கோதுமை மா கொள்வனவு, விற்பனை சம்பந்தமாகத் தெரிவிக்கப்பட்ட புகாரைத்தொடர்ந்து கூட்டுறவு ஆணையாளரின் பணிப்பின் மீது கூட்டுறவு பரிசோதகர் விசாரணை மேற்கொண்டுள்ளார்.

கடந்த வருடம் செப்டம்பர் மாதத்தில் இச்சங்கம், மா கொள்வனவு, விற்பனையில் ஒழுங்கான முறையில் நடந்து கொள்ளவில்லையென்று பொதுச் சபை உறுப்பினர்கள் சிலர் புகார் செய்ததைத்தொடர்ந்து கூட்டுவுறவுப் பரிசோதகர் விசாரணை நடத்தியபோதிலும்; இதுசம்பந்தமாக மேற்கொண்டும் விசாரணை நடத்துமாறு அப்பொதுச்சபை உறுப்பினர்கள் கூட்டுறவு ஆணையாளரைக் கோரியதைத் தொடர்ந்து இவரது உத்தரவின் மீது இப்பொழுது விசாரணை நடைபெற்று வருகிறது.

பெதுச்சபை உறுப்பினர்கள் உட்பட, சங்கத்தின் தலைவர் மற்றும் ஊழியர்கள் கடந்த வாரம் விசாரணை செய்யப்பட்டனர். விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

2 லட்சம் ரூபாவில்

### இராஜகோபுரம் நிறுவப்படும்

(பண்டத்தரிப்பு)

பிரசித்தி பெற்ற மாதகல் நுணசை முருகமூர்த்தி ஆலயத்திற்கு இரண்டு இலட்ச ரூபா செலவில் இராஜகோபுரம் ஒன்று நிறுவப்படவுள்ளது. கனடா நாட்டில் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ள மாதகல் வாசி ஒருவர் தமது உபயமாக இந்த இராஜகோபுரத்தை அமைத்துக் கொடுப்பதற்கு முன்வந்திருப்பதாக அறியப்படுகின்றது. (க)

### இப்படியும் நடக்கிறது

ஸ்ரீ ஜயவர்த்தன புரவில் அமைந்திருக்கும் புதிய பாராளுமன்றத்தின் திறப்புவிழா நிகழ்ச்சிபற்றி அண்மையில் ஒரு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

ஜனதிபதி, பிரதமர், சபாநாயகர் உட்பட பாராளுமன்ற அங்கத்தவர்களான திருவாளர்கள் எம். சிவா, மைத்திரி, சரத், ஆனந்ததிஸ்ஸ மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்ட இந்த ஆலோசனைக்கூட்டத்தில்; பாராளுமன்றத்திறப்புவிழா முழு நிகழ்ச்சி நிரலும் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

இது சம்பந்தமாக தகவல் திணைக்களம் உத்தியோக பூர்வமாக வெளியிட்ட செய்தியில்; அமைச்சர்கள், எதிர்க்கட்சி எம், பி.க்கள் ஆகியோரின் உரைபற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் பற்றியோ, அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சி அல்லது உரை குறித்தோ ஒரு வரி கூட இல்லை!

'ஊடுருவி'

## மாடுதிருட்டு வழக்கு; எதிரிக்கு 4 வருட சிறை

(சாவகச்சேரி)

மாடுதிருடியதாக குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கில், குற்றத்தை ஒப்புக் கொண்ட எதிரிக்கு 4 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் நீதிபதி எச். எம். காரியப்பர் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் கண்டி சுதுகொம்பல வீதியைச் சேர்ந்த சாமிவேல் முருகையா அல்லது பத்மநாதன் என்பவர் கைதடி தெற்கு சடையன் நன்னி என்பவரது வீட்டில் 82 மார்ச் 16ம் தேதி 800 ரூபா பெறுமதியான மாட்டைத்திருடியதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகுற்றத்தை ஒப்புக் கொண்டதால் நீதிபதி திருடிய குற்றத்திற்கு 2 வருடமும், மாட்டை வைத்திருந்ததிற்கு 2 வருடமுமாக 4 வருடச் சிறைத்தண்டனை விதித்தார். (க)

### புதிய பாராளு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உபசெயலகம் ஒன்றை இயங்கச் செய்தல்.

[3] கிளிநொச்சியில் ஒரு பிரதம கல்வி உத்தியோகத்தரின் பொறுப்பின் கீழ் கல்வி உபஅலுவலகம் ஒன்றை இயங்கச் செய்தல்.

[4] புதிய ஆசிரிய நியமனங்கள் இடம் பெறும்போது கிளிநொச்சியில் உள்ள ஆசிரிய பற்றுக்குறையை கவனத்தில் எடுத்து அதனை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்தல் அங்கு அதிக ஆசிரியர்களை நியமிக்க ஒழுங்கு செய்தல்.

[5] பல்கலைக்கழக அனுமதியில் கிளிநொச்சித்தொகுதியை பின்தங்கிய கல்விப் பிரதேசமாக கணிக்கச் செய்ய உயர் கல்வி அமைச்சரான ஜனதிபதியை தொடர்பு கொண்டு வற்புறுத்தல். அது சாத்தியப்படும் வரை யாழ். மாவட்டத்திற்கு மாவட்ட ரீதியில் ஒதுக்கம்படும் பல்கலைக்கழக அனுமதியில் 10 வீதத்தை கிளிநொச்சிப்பகுதி மாணவர்களுக்கு வழங்குதல்.

[6] முன்னர் போன்று மாவட்ட அபிவிருத்தி திட்டங்களில் கிளிநொச்சிக்கு முன்னுரிமை வழங்குதல்.

### புதிய பாராளுமன்றம்

இதையடுத்து புதிய கோட்டே ஸ்ரீ ஜெயவர்தனபுர பாராளுமன்றத்திற்கு கூட்டணி எம். பிக்கள் செல்வது குறித்து எழுந்துள்ள நிலைமைபற்றி ஆராயப்பட்டது. புதிய பாராளுமன்றத்திற்கு தொடர்ந்து செல்வதென்றும் அதுபற்றி மேலும் ஆலோசிப்பதற்கு இன்றைய சூழ்நிலையில் எல்வித அவசியமும் இல்லை என்றும் தீர்மானிக்கப்பட்டது. [க]

## குப்பி விளக்கிற்கு குடும்பஸ்தர் பலி!

(பண்டத்தரிப்பு)

இரவு வேளையில் நடைபெற்ற தீவிபத்து ஒன்றில் சிக்கி பலத்த எரிகாயங்களுடன் யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நீர்வேலியைச் சேர்ந்த இராமன் என்பவர் அங்கு மரணமானார்.

இவரது மரண விசாரணை யாழ். அரசினர் வைத்தியசாலையில் யாழ்மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் முன்னிலையில் நடைபெற்றது.

காலஞ்சென்றவரும் அவரது மனைவியும் மற்றும இரு பிள்ளைகளும் வீட்டில் நித்திரையில் இருந்த சமயம் அங்கு எரிந்து கொண்டிருந்த போத்தில் குப்பிவிளக்கு தற்செயலாக சரிந்து விழுந்ததினல் ஓலைத்தட்டியில் நெருப்புபற்றியதைபடுத்து இத் தீவிபத்து ஏற்பட்டதென்றும், பலத்த காயங்களுக்குள்ளான காலம் சென்றவரை யாழ். அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று அனுமதித்ததாகவும்; அனுமதிக்கப்பட்டு நான்கு தினங்களின் பின்பு அவர் அங்கு மரணமடைந்ததாகவும் சாட்சியங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டன,

இறந்தவரின் மனைவி சிதம்பரம், பிள்ளைகள் சிவஞானேஸ்வரன், விஜேதினி ஆகியோருக்கும் தீக்காயங்கள் ஏற்பட்டு யாழ். அரசினர் வைத்திய சாலைவார்ட்டில் சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாகவும் விசாரணையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. விசாரணைமுடிவில் தீக்காயங்களினல் ஏற்பட்ட விபத்து மரணம் என்று மரண விசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்கினர். (க)

### பாரத செயற்கை...

(1ம் பக்கத தொடர்ச்சி)

பாட்டு நிலையத்தினர் முயற்சியால் அது செயல்பட ஆரம்பித்தது செயற்கைக்கோள் இப்பொழுது சீராக இயங்குகிறது. [க]


## இரண்டாண்டு நினைவஞ்சலி

க. பொ. செல்லையா அவர்கள்

முன்னாள் ராஜா றைஸ்மில் உரிமையாளர்

கொக்குவில்

தோற்றம்: 22-03-1908 - மறைவு: 12-04-1980

சிந்தையெல்லாம் நிறைந்தவரே:
செல்வ ஐயா!
சிவனடியைச் சேர்ந்து நீங்கள் இன்றுடனே
சென்றதையா இரண்டாண்டு நொடிப்பொழுதில்
சிரித்த முகம் இதயமதில் மறையவில்லை...
இன்றல்ல—எத்தனை நூற்றுண்டுகள் தான்
இருளாகக் கழிந்தாலும் ஜோதியதாய்த்
தோன்றுகின்ற உம ஆன்மா சாந்திபெற
தூயவனும் இறைபாதம் துதித்து நிற்போம்.

— அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

28'4



## மரண அறிவித்தல்

வீரசிங்கம் கணேசசங்கரி

வீரசிங்கம் கணேசசங்கரி காலமானர். மங்களேஸ்வரியின் கணவரும் டாக்டர் துளசிமலர், யோகசங்கரி, குணசங்கரி ஆகியோரின் தந்தையும், டாக்டர் குமார், மனோரஞ்சிதவதனி ஆகியோரின் மாமனும், திருமதி இராசதுரை இரத்தினத்தின் மருமகனும், தபாலதிபர் இராசலிங்கத்தின் மைத்துனரும், இராஜசிரிதரன், பிரிந்தினி, சுபசங்கரி ஆகியோரின் பேரனுமாவார்,

ஈமக்கிரியைகள் திங்கட்கிழமை (82.04.12) தோப்பு அச்சுவேலியில் நடைபெறும்.

2838


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாடு'' லிமிடெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 803ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் ஏப்பிரல் மீ 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as News Paper [illegible] he General P.O. Sri Lanka. Regd. Q. B. 100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 77 07, 889, 8126.